**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 156/2021</u>**

நாள் 15.04.2025

PW1 – லட்சுமி (எ) தனலட்சுமி

க/பெ – ஓதிசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of April 2025.)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எனது அப்பா பெயர் அங்கப்ப கவுண்டர் ஆகும். தாவா சொத்தை ஆதியில் எனது அப்பாவின் அப்பா சீரங்க கவுண்டர் தான் சம்பாதித்தார். அதற்கு பிறகு எனது அப்பாவும் சில சொத்துக்களை கிரையமாக வாங்கினார். எனது அப்பா அங்கப்ப கவுண்டர் 27.09.2006–ம் தேதியில் இறந்து போய்விட்டார். எனது உடன் பிறந்தவர் எனது அண்ணன் ஆறுமுகம் ஆவார். எனது அப்பா அங்கப்ப கவுண்டர் அவர் உயிருடன் இருக்கும் காலத்திலேயே 17.03.2006–ம் தேதியில் எனது சகோதரர் ஆறுமுகம் பெயரில் உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது தாயார் கருணையம்மாள் பெயரில் கடந்த 08.07.1979–ம் தேதியில் ஒரு சொத்தை கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்தை எனது அம்மாவின் திருமணத்திற்கு பின்பு வாங்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு 1992–ம் ஆண்டில் 2–வது திருமணம் நடைபெற்றது. எனது கணவர் ஊர் அன்னூர் அருகில் உள்ள ஒட்டர்பாளையம் ஆகும். எனது திருமணத்தின் போது எனது பெற்றோர் எனக்கு எத்தனை பவுன் நகை போட்டார்கள் என்றால் எனக்கு நகை எதுவும் போடவில்லை.

2. எனக்கு முதல் திருணம் 1992–ம் ஆண்டுக்கு இரண்டு வருடத்திற்கு முன்பாக நடந்தது. எனது முதல் கணவர் திருப்பூரைச்

சேர்ந்தவர். எனது முதல் திருமணத்தின் போது எனக்கு எனது பெற்றோர் வீட்டில் 15 பவுன் தங்க நகைகள் போட்டார்கள். அந்த நகைகள் கடையில் புதியதாக விலைக்கு வாங்கி தான் எனக்கு போட்டார்கள். எனது அப்பா சம்பாதித்து கொடுத்த பணத்தை வைத்து தான் எனது அம்மா கருணையம்மாள் பெயரில் சொத்து கிரையம் வாங்கப்பட்டது என்றால் இல்லை, எனது அம்மாவின் நகைகளை விற்று தான் சொத்து வாங்கப்பட்டது. நான் 1971-ம் ஆண்டில் பிறந்தேன். நான் 8-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது அம்மா பெயரில் 1979-ம் ஆண்டில் சொத்து கிரையம் வாங்கும் போது எனக்கு சுமார் 8 வயது இருந்திருக்கும் என்றால் சரிதான். அதனால், எனது அம்மா பெயரில் கிரையம் வாங்கப்பட்ட விபரம் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. அப்போது எனது அம்மா 5 பவுன் நகையை விற்றார். அந்த சமயத்தில் ஒரு பவுன் நகை என்ன விலை என்று எனக்குத் தெரியாது. அந்த நகையை எந்த கடையில் எடுத்தார்கள் என்றும் எனக்குத் தெரியாது. நான் சொல்வது போல நகை எதுவும் விற்கப்படவில்லை என்றும், எனது அப்பா சம்பாதித்த பணத்தை வைத்து தான் எனது அம்மா பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு திருமணம் நடந்ததிலிருந்து எனது கணவர் வீட்டில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான்.

3. எனக்கு திருமணம் ஆன நாள் முதல் எனக்கும், எனது தாயார் கருணையம்மாளுக்கும் இடையே சுமூகமான உறவு தான் இருந்து வந்தது. இந்த வழக்கை நான் தாக்கல் செய்வதற்கு முன்பாக எனது தாயார் கருணையம்மாள் உடன் நான் கலந்து பேசி தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். எனது தாயாரும் நான் இந்த வழக்கை தாக்கல் செய்ய ஒத்துழைப்பு கொடுத்தார். ஆனால், எனது தாயாரை இந்த வழக்கில் 2-ம் பிரதிவாதியாக காண்பித்து தான் பொய்யாக இந்த வழக்கை தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் எனது தாயாருக்கும் பாகம் இருப்பதாக சொல்லி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு எனது தாயாரை 2–ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளதற்கு ஏதேனும் சிறப்பு காரணம் உள்ளதா என்றால் இல்லை. நான் எனது தாயாருடன் நல்ல சுமூகமான உறவு முறையில் இருந்து வந்துள்ள போதிலும் எனது அப்பா எனது சகோதரர் ஆறுமுகம் பெயருக்கு உயில் எழுதி வைத்ததை அறிந்து தான் நான் அந்த உயிலை ரத்து செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தான் எனது தாயாரை 2–ம் பிரதிவாதியாக சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

4. எனது அண்ணன் ஆறுமுகம் என்பவருக்கு எப்போது திருமணம் நடந்தது என்று எனக்குத் தெரியாது, எனது திருமணத்திற்கு பின்பு தான் அவருக்கு திருமணம் நடந்தது. எனது அண்ணன் ஆறுமுகம் என்பவருக்கு அவரது மனைவி 1–ம் பிரதிவாதி சிவகாமி மூலம் நேரடியாக குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை என்றால் சரிதான். அதனால், அவர்கள் 3–ம் பிரதிவாதி ராதிகாவை தத்து எடுத்து வளர்த்து வந்து தண்டுக்காரம்பாளையத்தில் உள்ளூரிலேயே திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் அது எனக்குத் தெரியாது. மேற்படி ராதிகாவை 3–ம் பிரதிவாதியாக எதற்காக வேண்டி இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் 3–ம் பிரதிவாதியை அவர்கள் தத்து எடுத்து வளர்த்து வந்ததாக பக்கத்து வீட்டுக்காரர்கள் சொன்னதின் பேரில் கட்சி சேர்த்துள்ளேன். அவ்வாறு விசாரித்து தெரிந்து கொண்டு தான் உண்மை என எனக்கு தெரிந்ததால் ராதிகாவை கட்சி சேர்த்துள்ளேன்.

5. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது எனது தாயார் கருணையம்மாள் பாகத்தை நான் 15.10.2014–ம் தேதியில் உயில் ஆவணம்

எழுதி வாங்கியுள்ளேன். அந்த உயில் ஆவணத்தில் எனது தாயாரின் வயது 82 என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாயார் இறக்கும் வரை தண்டுக்காரம்பாளையத்தில் வசித்து வந்து தான் இறந்து போனார் என்றால் சரியல்ல, எனது வீட்டில் ஒட்டர்பாளையத்தில் வைத்து தான் இறந்து போனார். எனது தாயார் இறப்பதற்கு முன்பு 4 வருட காலம் ஒட்டர்பாளையத்தில் என்னுடன் வசித்து வந்தார். அப்போது பிரதிவாதியான எனது தாயாரை வாதியாக மாற்றுவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அப்போது எனது தாயார் உடல்நிலை சரியில்லாமல் இறந்து போனரா என்றால் இல்லை, அவர் திடீரென்று தான் இறந்து போனார். எனது அம்மா 03.11.2016–ம் தேதியில் இறந்து போனார். எனது அம்மா இறந்து 4 நாட்கள் கழித்து தான் உயில் ஆவணம் பற்றி எனக்கு தெரிய வந்தது, அப்போது தான் அந்த உயிலை படித்து பார்த்தேன். எனது அம்மாவின் இறுதிச்சடங்கை ஒட்டர்பாளையத்தில் வைத்து தான் நடத்தினோம். உயில் பத்திரம் எனது அம்மாவின் இரும்பு பெட்டியில் தான் இருந்தது. அப்போது எனது கணவரும் உயிலில் சாட்சி கையொப்பம் போட்ட வெள்ளியங்கிரியும் உடனிருந்தார்கள். அந்த உயிலில் கருணையம்மாள் தனக்கு வயோதிகம் காரணமாக அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் போய்விடுகிறது என்றும், அதற்கு நான் மருந்துகள் கொடுத்து கவனித்து வருகிறேன் என்றும் பொய்யாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, சளி காய்ச்சலுக்கு மருந்து வாங்கி கொடுப்பேன். நான் சொல்வது பொய் என்றும், நான் முன்னுப்பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாகம் பிரிவதாக பொதுச்சொத்தை உயில் சாசனம் எழுதி வாங்கியது பொய் என்றும் அந்த உயில் சாசனம் செல்லாது என்றும் சொன்னால் சரியல்ல. எனது தாயாரை உயில் சாசனம் எழுத சாட்சி கையொப்பமிட்ட பழனிச்சாமி என்பவர் அழைத்துச்சென்றார்.

மேற்படி பழனிச்சாமி எனது கணவருக்கு மாமன் முறை என்றால் சரிதான். உயிலில் கையொப்பம் செய்த மற்றொரு சாட்சி வெள்ளியங்கிரி எனது கணவருக்கு பங்காளி ஆவார். எனது தாயார் வயோதிகத்தினால் நல்ல மனநிலை இல்லாமல், உடல்நிலை பாதிக்கப்பட்டு எனது வீட்டில் இருந்தார் என்றால் சரியல்ல.

6. எனது தாயாரை உயில் எழுத அழைத்துச்சென்ற பழனிச்சாமி என்னிடம் எதுவும் கூறவில்லை. அப்போது எனது தாயார் கைவசம் இருந்ததை நான் பார்க்கவில்லை. எனது அம்மாவை உயில் எழுத அழைத்துச் சென்ற போது நான் எனது வீட்டில் தான் இருந்தேன். அப்போது எனது தாயார் தண்டுக்காரம்பாளையம் ஊருக்கு போய்விட்டு வருவதாக தான் என்னிடம் சொல்லிவிட்டு சென்றார். ஆனால், எனது தாயார் அன்றைய தினம் மாலை எனது வீட்டிற்கு வந்து விட்டார். நான் கேட்டதற்கு ஊருக்கு போய்விட்டு வந்து விட்டதாக சொன்னார். எனது தாயாருக்கு 82 வயதான போதும் ஊருக்கு போவதாக கூறி பஸ் ஏறி போவதற்கு சிரமமப்படுவார் என தனியாக விடாமல் பாதுகாப்பாக செல்வதற்கு நான் ஏற்பாடுகள் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தாயார் தனியாக சென்று வருவதாக சொன்னால் நான் விட்டு விடுவேன். எனது தாயாருக்கு கையெழுத்து போடத்தெரியாது, கைரேகை தான் வைப்பார் என்றால் சரிதான். எனது தாயாருக்கு அடையாள அட்டை எதுவும் இல்லை. எனது தாயாருக்கு ஆதார் அடையாள அட்டை இல்லை, வாக்காளர் அட்டை தொலைந்து விட்டது, குடும்ப அட்டை மட்டும் உள்ளது. அந்த குடும்ப அட்டையின் ஜெராக்ஸ் மட்டும் எனது வீட்டிற்கு வரும் போது எடுத்து வந்தார். அந்த குடும்ப அட்டையின் ஜெராக்ஸை எனது அம்மாவின் பெட்டியில் பத்திரமாக வைத்திருந்தார். பழனிச்சாமி எனது தாயாரை அழைத்துச் செல்ல வீட்டிற்கு வரவில்லை. அன்னூரில்

பத்திர அலுவலகத்தில் வைத்து பழனிச்சாமியை பார்த்ததாக எனது தாயார் சொன்னார். அவ்வாறு எனது தாயார் எப்போது கூறினார் என்றால், பழனிச்சாமி தான் எனது அம்மா இறந்து 4 நாட்கள் கழித்து விபரத்தை சொன்னார். நான் உயில் ஆவணத்தை மோசடியாக தயாரித்ததால் தான் முன்னுப்பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பழனிச்சாமி உயில் எழுதுவதற்கு 2 நாட்களுக்கு முன்பு வீட்டிற்கு வந்து சென்றார். அப்போது உயில் எழுதுவது சம்பந்தமாக நான் பழனிச்சாமியிடம் சொன்னேனா என்றால், நான் சொல்லவில்லை எனது தாயார் தான் சொல்லியுள்ளார். என்னிடம் எதுவும் நேரடியாக பேசிக்கொள்ளவில்லை. எனது தாயார் நல்ல மனநிலையில் உயில் எனது பெயருக்கு எழுதி வைக்கவில்லை என்றும், நானும் எனக்கு வேண்டிய நபர்களும் சேர்ந்து சட்டத்திற்கு புறம்பாக உயில் ஆவணத்தை தயார் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால், அந்த உயில் சாசனத்தின் படி எவ்வித உரிமையும் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. 3-ம் பிரதிவாதி ராதிகாவுக்கு ஆறுமுகத்தின் தத்து மகன் என்பதால் தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றும், அந்த உரிமையை மறைத்து தாக்கல் செய்து இந்த வழக்கு செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்கில் பங்கு விகிதாச்சாரம் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் எழுதி வைத்த உயில் சாசனப்படி எனது சகோதரர் ஆறுமுகத்திற்கு சொத்து பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதனால், இந்த வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

7. நான் மேலே சொன்ன பழனிச்சாமி இறந்து போய்விட்டார். மற்றொரு சாட்சியான வெள்ளியங்கிரி என்பவரை சாட்சி சொல்ல நான் தான் அழைத்து வந்துள்ளேன். வெள்ளியங்கிரி உயில் எழுதுவதற்கு 2,3

நாட்களுக்கு முன்பாக எனது வீட்டிற்கு வந்து சென்றார். அந்த வெள்ளியங்கிரி உயில் எழுத வேண்டி எனது தாயாரை அழைத்துச் செல்லவில்லை. நான் இந்த வழக்கை முறைப்படி தாக்கல் செய்யாததால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.04.15 17:00:47 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**

**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**OS – 156/2021**

நாள் 15.04.2025

PW2 – வெள்ளியங்கிரி

த/பெ – ராமசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of April 2025.)**

**குறுக்கு விசாரணை**

1. வாதி தனலட்சுமி எனக்கு சித்தி முறை ஆவார். லட்சுமியின் தாயார் கருணையம்மாள் திருமணம் செய்து வாழ்ந்து வந்தது தண்டுக்காரம்பாளையம் ஆகும். வாதியின் தாயார் கருணையம்மாள் ஒட்டர்பாளையத்தில் வைத்து தான் இறந்து போனார் என்றால் சரிதான். கருணையம்மாள் அவரது மகளான வாதியின் வீட்டிற்கு வந்து 4 வருட காலம் தங்கி இருந்தார். அப்போது உடல்நிலை சரியில்லாமல் தான் வாதி வீட்டிற்கு வந்தார் என்று சொன்னால் சரியல்ல. கருணையம்மாள் எழுதிய உயில் ஆவணம் சம்பந்தமாக நான் சாட்சி கையொப்பம் செய்தது குறித்து சாட்சி சொல்ல வந்துள்ளேன். உயில் எழுதும் போது நான் அருகில் இருந்தேன். அந்த உயிலை எழுதும் போது நான் படித்து பார்த்தேன். அந்த உயில் ஆவணத்தில் கருணையம்மாள் தனக்கு வயோதிகம் காரணமாக அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் போய்விடுகிறது என்று எழுதியுள்ளது என்றால் சரியல்ல. கருணையம்மாள் உடல்நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையாக இருந்தது கிடையாது, திடீரென்று தான் அவர் ஒரே நாளில் இறந்து போய்விட்டார். அந்த கருணையம்மாளுக்கு அவருடைய மகள் தான் மருந்துகள் கொடுத்து கவனித்து வந்ததாக உயில் ஆவணத்தில் சொல்லியிருந்தால் அது தவறு. கருணையம்மாள் உயில் எழுதிய போது 82

வயது என்றால் சரிதான். 82 வயது வாக்கில் பொதுவாக உடல் தளர்ந்து விடும் என்றால் சரிதான். உயில் எழுதுவது சம்பந்தமாக கருணையம்மாள் என்னிடம் உயில் எழுதுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாகவே என்னிடம் சொன்னார். நான் வாதியின் வீட்டிற்கு தினமும் சென்று வருவது வழக்கம். அதேபோல உயில் எழுதிய தேதியிலும் நான் வாதியின் வீட்டிற்கு சென்றிருந்தேன். அதனால்,கருணையம்மாளை நான் தான் உயில் எழுத அழைத்து சென்றேன் என்றால் இல்லை, அவர் ஏற்கனவே பழனிச்சாமியுடன் சென்று விட்டார். பழனிச்சாமி வீடு வாதி வீட்டிலிருந்து ஒரு 1/2 கி.மீ தூரம் இருக்கும். பழனிச்சாமி அவரது பைக்கில் தான் வாதியின் வீட்டிற்கு வந்து கருணையம்மாளை அழைத்துச் சென்றார். நான் வாதியின் வீட்டிற்கு சென்றபோது கருணையம்மாளை ஏற்கனவே பழனிச்சாமி அழைத்துச் சென்று விட்டிருந்தார். அதனால், நான் தனியாக தான் அன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேன். உயில் எழுதுவதற்கு முந்தைய நாளே பழனிச்சாமி கருணையம்மாளை அழைத்துச் செல்வதாக என்னிடம் சொல்லியிருந்தார். என்னையும் வரும் படி சொல்லியிருந்தார். உயில் எழுதவதற்கு முந்தைய நாள் கருணையம்மாளும் என்னை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரும் படி கூறினார். வாதி லட்சுமி வீடு எனது பக்கத்து வீடு. அந்த உயில் எழுதுவது சம்பந்தமாக நான் லட்சுமியிடம் சென்று விசாரிக்கவில்லை. சொத்து சம்பந்தமாக ஆவணத்தின் நகலை சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தான் கருணையம்மாள் காண்பித்தார்.

2. மேற்படி வீதம், உயில் எழுதி வைத்த விபரத்தை கருணையம்மாள் இறந்து 3 நாட்கள் கழித்து தான் வாதியிடம் நான் சொன்னேன். ஆவண எழுத்தர் பாபு என்பவர் பழனிச்சாமிக்கு பழக்கமானவர். நாங்கள் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்ற போது ஆவண எழுத்தர் பாபு அங்கு

இல்லை. அதனால், கோவிந்தராஜ் என்ற பத்திர எழுத்தர் தான் உயிலை எழுதினார். அந்த உயிலில் கண்ட சொத்து சம்பந்தமாக வாதி லட்சுமி இந்த வழக்கை தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகின்ற விபரம் எனக்குத் தெரியும். அந்த உயிலை பதிவு செய்வதற்காக சார்பதிவாளரிடம் சமர்பித்த போது சார்பதிவாளர் வழக்கு நிலுவையில் இருக்கும் போது சொத்தின் அசல் ஆவணம் இல்லாமல் நகலை வைத்து உயிலை பதிவு செய்ய முடியாது என்று சொல்லி உயில் ஆவணத்தை திருப்பிக் கொடுத்து விட்டார். அதனால், பத்திர எழுத்தர் கோவிந்தராஜ் இந்த உயில் ஆவணமே போதுமானது என்று சொல்லி கருணையம்மாளிடம் கொடுத்து விட்டார். கோவிந்தராஜ் என்பவர் அரசு உரிமம் பெற்ற பத்திர எழுத்தரா என்று எனக்குத் தெரியாது. ஆவண எழுத்தர் பாபு எனக்கு பழக்கமானவர் இல்லை, பழனிச்சாமி என்பவருக்குத் தான் அவர் பழக்கம். பழனிச்சாமி கடந்த 2 மாதத்திற்கு முன்பு இறந்து போய்விட்டார். பாபுவிடம் செல்வதாக நாங்கள் எல்லோரும் கலந்து பேசி முடிவு செய்திருந்தோம் என்றால் சரிதான். அவ்வாறு நாங்கள் கலந்து ஆலோசித்த பிறகும், அது குறித்து வாதியிடம் நாங்கள் எதுவும் சொல்லிக்கொள்ளவில்லை. வாதியிடம் சொல்லக்கூடாது என்று கருணையம்மாள் எங்களிடம் சொல்லியிருந்தார். கோவிந்தராஜ் ஆவண எழுத்தர் அன்னூரிலும், மேட்டுப்பாளையத்திலும் ஆவணம் எழுதுவார்.

3. நான் 10–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். உயில் ஆவணத்தில் ஆவண எழுத்தராக கோவிந்தராஜ் என்பவருடைய பெயர் உள்ளது. அதில் மேட்டுப்பாளையம் முகவரி தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், அன்னூரிலும் கோவிந்தராஜ் அலுவலகம் வைத்துள்ளார். அதனால் உயில் ஆவணம் மேட்டுப்பாளையத்தில் வைத்து தான் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் இல்லை, அன்னூரில் வைத்து தான் தயார்

செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 உயில் ஆவணத்தை தயார் செய்து கருணையம்மாள் உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்த நிலையில் மேட்டுப்பாளையத்தில் வைத்து பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. உயில் ஆவணத்தை கோவிந்தராஜ் என்பவரே டைப் செய்தார். கோவிந்தராஜ் என்ற ஆவண எழுத்தரே கிடையாது என்றும், அப்படி உண்மையான ஆவண எழுத்தராக கோவிந்தராஜ் இருந்திருந்தால் அந்த உயில் ஆவணத்தை முறையாக பதிவு செய்து கொடுத்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து அமைந்துள்ள தண்டுக்காரம்பாளையம் கிராமத்திற்கு சேர்ந்து சார்பதிவாளர் அலுவலகம் புஞ்சை புளியம்பட்டி சார்பதிவாளர் அலுவலகம் என்றால் சரிதான். சம்பந்தப்பட்ட புஞ்சை புளியம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று உயில் ஆவணத்தை பதிவு செய்ய முயற்சி செய்தோமா என்றால் இல்லை.

4. கருணையம்மாளுக்கு அன்னூரில் உள்ள சார்பதிவாளர் அலுவலகமோ, பத்திர எழுத்தரோ தெரியாது என்றால் சரிதான். உயில் ஆவணத்தை புளியம்பட்டி சார்பதிவளார் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளலாம் என்று நான் சொல்லவில்லை. ஆவண எழுத்தர் கோவிந்தராஜ் அவருடைய முத்திரை (சீல்) வைத்து தான் கையொப்பம் செய்தார். உயிலில் முதல் சாட்சியாக பழனிச்சாமி தான் கையொப்பம் செய்தார். ஆவணம் தயாரித்தவரும், தட்டச்சு செய்தவர் என்று எழுதி கோவிந்தராஜ் தான் சீல் வைத்து கையொப்பம் செய்தார். அந்த பழனிச்சாமி எனக்கு உறவினர் என்றால் சரிதான். அதனால், நானும், வாதியும், பழனிச்சாமியும் சேர்ந்து மோசடியாக உயில் ஆவணத்தை தயார் செய்து வாதி லட்சுமிக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

**Subordinate Judge,**
**Avinashi.**